திரு. எஸ்.எம்.ஏ. மஜீத் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு *1962* முதல் *1967* வரை சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் *21.* (குறுக்கீடுகள்)

3. முக்கிய பிரச்சினையை வினாக்கள்-விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைத்துவிட்டு இன்றைக்கு ஈழத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இனப் படுகொலை குறித்து இந்த அவையில் விவாதிக்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடியட்டும். (குறுக்கீடு) கேள்வி நேரத்திற்கு முன்னாலே வேறு எதையும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று விதி இருக்கிறது. உட்காருங்கள்.

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)